திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, மேச்சேரி செம்மறி ஆடுகள் மைசூர் மாநில மாண்டியா ஆடுகளை விட தரத்திலும், இறைச்சியின் சுவையிலும் சிறந்தது. எனவே அந்த மேச்சேரி செம்மறி ஆடுகள் இனத்தை அபிவிருத்தி செய்யும் அளவிலே ஏதேனும் தனித் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? இல்லையெனில் இனிமேலாவது செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இறைச்சியின் சுவை சிறந்தது என்று குறிப்பிடுகிற காரணத்தால், அபிவிருத்தி குறைந்து இருக்கக்கூடும். இருப்பினும், அதனை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அந்த வேளாண்மை ஆராய்ச்சிக்குழுவிற்கு தகவல் அனுப்பப்படும்.

திரு. சு. முத்துகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஆடு ஆராய்ச்சிப் பண்ணை பற்றி அவர்கள் விளக்கம் அளித்தார்கள். அந்த ஆராய்ச்சிப் பண்ணையில் ஆடுகளின் பெருக்கத்திற்காக, ஆராய்வதற்காக மேல்நாடுகளில் இருந்து ஏதாவது ஆடுகள் நம் மாநிலத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா? அந்த ஆராய்ச்சிப் பணிக்குழுவை தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் நிறுவ அரசுக்குத் திட்டம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, திட்டம் இல்லை.

கோவை விவசாயப் பல்கலைக்கழக ஆசிரியர் குறைகள்.

*வினா எண். 131 திரு. கு. ரமணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை விவசாயப் பல்கலைக்கழக ஆசிரியர்களின் குறைகளைப் பரிசீலிக்க ஒரு நபர் விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குழுவின் விசாரணைக்கு விடப்பட்டுள்ள விஷயங்கள் என்ன?

(இ) விசாரணை முடிவு எப்பொழுது வெளியிடப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களின் ஊதியங்களைப் பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களில் நிர்ணயம் செய்தல். மேலும் இவர்களது இதுபோன்ற மற்ற விவரங்களைப் பரிசீலனை செய்தல்.

(இ) குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அந்தக் குழுவின் அறிக்கை அரசாங்கத்திற்கு வந்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழுவிலே ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் மற்ற சலுகைகள் மட்டுமல்லாமல். அங்கே இருக்கக்கூடிய நான் டீச்சிங் ஸ்டாபாக இருக்கக்கூடிய மற்ற ஊழியர்களின் விஷயங்களும் அதில் அடங்கியிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அடங்கியுள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, எந்தக் கால அளவிற்குள் அரசு அந்தச் சிபாரிசுகளை ஏற்றுக்கொள்வது அல்லது திருத்தம் செய்து வெளியிடுவது என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இன்னும் 10 நாட்களுக்குள்

மார்த்தாண்டம்—பேச்சிப்பாறை சாலையிலுள்ள பாலம்.

வினா எண். 132—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: திரு. டி. மணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர். கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் தாலுகாவில் மார்த்தாண்டம் பேச்சிப்பாறை சாலையில் 5, 6 கிலோ மீட்டரில் உள்ள இரும்புப் பாலமானது சாலை மட்டத்திலிருந்து அதிகமாகத் தாழ்ந்துள்ளதால் அங்கு போக்குவரத்து தடைபட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஒரே நேரத்தில் ஒரு பஸ்ஸுக்கு மேல் போக முடியாத அளவிற்கு அந்தப் பாலம் குறுகியதாக இருக்கிற காரணத்தாலும், 50 ஆண்டுக் காலத்திற்கு முன்பு அது கட்டப்பட்டது என்ற காரணத்தாலும், அந்த மார்த்தாண்டம் பேச்சிப்பாறை ரோடு மிக முக்கிய சாலையாக இருக்கிற காரணத்தாலும், அந்தப் பாலத்தை அகலப் படுத்தி புதுப்பாலம் கட்ட அரசு முன்வருமா?